# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 22

# ஆசரிப்புக் கூடார பலிகள்




Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# ஆசரிப்புக் கூடார பலிகள்








கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இப்போது நாம் பார்க்கப்போகிற பாடமானது, 'பாவ நிவாரண பலிகள்" ஆகும். சென்ற பாடத்தில் ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்தோம். இந்தப் பாடத்தில் பாவ நிவாரண நாளில் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் செலுத்தப்பட்ட பலிகளைக் குறித்துக் காண்போம்.

இன்றைய கால கிறிஸ்தவர்களாகிய நமக்கு பாவ நிவாரண பலிகள் ஆவிக்குரிய போதனைகளைத் தருவதால், இதைக் குறித்த விளக்கத்தை அறிந்து கொள்வது மிக முக்கியமானதும் விசேஷமானதும் ஆகும். முதலாவதாக, பாவ நிவாரண நாள் என்றால் என்ன என்று பார்ப்போம்.

## பாவ நிவாரண பலியின் நாள் - விளக்கம்

**லேவியராகமம் 16: 6-10**

**'பின்பு ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு, தன்னுடைய பாவநிவாரண பலியின் காளையைச் சேரப்பண்ணி, அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் கொண்டுவந்து, ஆசரிப்புக் கூடார வாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி, அந்த இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களையுங்குறித்துக் கர்த்தருக்கென்று ஒரு சீட்டும், போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவுக்கென்று ஒரு சீட்டும்போட்டு, கர்த்தருக்கென்று சீட்டுவிழுந்த வெள்ளாட்டுக்கடாவைப் பாவநிவாரண பலியாகச் சேரப்பண்ணி, போக்காடாக விடப்பட்ட சீட்டுவிழுந்த வெள்ளாட்டுக்கடாவை, அதைக்கொண்டு பாவநிவிர்த்தி உண்டாக்கவும் அதைப் போக்காடாக வனாந்தரத்திலே போகவிடவும், கர்த்தருடைய சந்நிதியில் உயிரோடே நிறுத்தி.."**

இவ்வசனங்களில் பிரதான ஆசாரியனான ஆரோன் பாவநிவாரணத்திற்கென்று தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் ஒரு காளையை பலிசெலுத்துகிறார்.

பின்பு இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களை பரிசுத்த ஸ்தலத்தின் வாசலில் கொண்டுவந்து, அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் குறித்து கர்த்தருக்கென்று ஒரு சீட்டும், போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக் கடாவுக்கென்று ஒரு சீட்டும் போட்டு, கர்த்தருக்கென்று ஒரு சீட்டு விழுந்த

வெள்ளாட்டுக் கடாவைப் பாவ நிவாரண பலியாகச் சேரப்பண்ணி,

போக்காடாக விடப்படுவதற்கு சீட்டு விழுந்த வெள்ளாட்டுக் கடாவை உயிரோடு கர்த்தருக்கு முன்பாக வனாந்தரத்தில் போகவிடவும் நியமிக்கிறார். ஒவ்வொரு வருடமும் கடைப்பிடிக்கப்படும் பாவ நிவாரண நாளின் பண்டிகையில் செலுத்தப்படும் பலிகள் இவைகளேயாகும். வேதத்தில் பதிவாகியுள்ள மிருகபலிகள் மற்றும் பழக்க வழக்கங்களுக்கும்.. இந்துக்கள், ஆப்பிரிக்கர்கள் தங்கள் தெய்வங்களுக்கு செலுத்தும் மிருக பலிகளுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை என்று அநேகர் நினைக்கின்றனர். இவையனைத்தும் உண்மையா? வேதத்தை ஆழமாக படித்திராத கிறிஸ்தவர்களுக்கு அப்படித்தோன்றலாம். ஆனால் கர்த்தருடைய புஸ்தகத்தில் தேடிவாசிக்கும்போது இதற்கான விடையை கண்டறியலாம்

**சங்கீதம் 50:9,10**

**'உன் வீட்டிலிருந்து காளைகளையும், உன் தொழுவங்களிலிருந்து ஆட்டுக்கடாக்களையும் நான் வாங்கிக்கொள்வதில்லை, சகல காட்டு ஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள்"**


இங்கு தேவன் தமக்கு மிருக பலிகள் தேவையில்லை என்று சொல்லியிருக்க, இந்த மிருகபலிகள் வேதத்தில் பதிவுசெய்யப்பட்டதற்கான காரணம் என்ன? இதற்கான பதிலை இன்றைய பாடத்தில் நாம் காணலாம்.

## பாவ நிவாரண பலி - விளக்கம்

**லேவியராகமம் 16:30,34**

**'கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் பாவமெல்லாம் நீங்கிச் சுத்திகரிக்கப்படும்படி, அந்நாளில் உங்களைச் சுத்திகரிக்கும்பொருட்டு, உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும். இப்படி வருஷத்தில் ஒருமுறை இஸ்ரயேல் புத்திரருக்காக, அவர்களுடைய சகல பாவங்களுக்கும் பாவநிவிர்த்தி செய்வது, உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது என்று சொல் என்றார். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே ஆரோன் செய்தான்"**

இஸ்ரயேல் ஜனங்கள் வருடத்திற்கொருமுறை தாங்கள் செய்த பாவங்களுக்காக பலிசெலுத்தி பாவநிவர்த்தி செய்து பரிசுத்தமடைய பாவ நிவாரண பலி செலுத்தினர்.
அன்று செலுத்தப்படும் முதல் பலி - காளை.



### பலி -1 காளை

பாவ நிவாரண நாளில் செலுத்திய பலிகளைக் குறித்து பார்ப்போமானால், முதலாவது ஒரு காளை மட்டும் பலி செலுத்தப்பட்டது. இக்காளையை பிரதான ஆசாரியர் தனக்காகவும், தன் வீட்டாருக்காகவும் பலி செலுத்துகிறார். காளையை எவ்வாறு பலி செலுத்தினார்? அது இன்றைய நாளில் எதற்கு அடையாளம் என்பதைக்

குறித்து இப்போது பார்க்கலாம்.

**காளையை பலிசெலுத்தும் முறை**

**லேவியராகமம்16:11,12**

**'பின்பு ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவ நிவர்த்தி செய்யும்படி, தன்னுடைய பாவநிவாரணத்துக்கான காளையைக் கொண்டுவந்து, அதைக் கொன்று, கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின்மேலுள்ள நெருப்புத் தணலினால் தூபகலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து,"**




பிரகாரத்திற்கு உட்புறம் வந்து, அதைக் கொன்று, அதின் இரத்தத்தின் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின் மேலுள்ள நெருப்புத் தணலினால் தூப கலசத்தை நிரப்பி, சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடி நிறைய எடுத்து பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறார்.

**லேவியராகமம் 16:13,14**

**- 'தான் சாகாதபடிக்குத் தூபமேகமானது சாட்சிப்பெட்டியின்மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடத்தக்கதாக, கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின்மேல் தூபவர்க்கத்தைப் போடக்கடவன். பின்பு காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தின்மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து கிருபாசனத்திற்கு முன்பாக ஏழுதரம் தன் விரலினால் தெளிக்கக்கடவன்"**



அப்புகையானது எழும்பி, பரிசுத்தஸ்தலத்தை நிரப்பி, பின்பு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும் பிரவேசிக்கச்செய்கிறது.



ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலத்தின் உடன்படிக்கைப் பெட்டியின் கிருபாசனத்திற்கு முன்பாக, கிழக்கு திசையிலிருந்து மேற்குநோக்கி நின்று, இரத்தம் தெளிக்கப்பட்ட விதம் குறித்து நம்முடைய மூத்த சகோதரர்கள், சிலுவைக்குறியில் தெளிக்கப்பட்டதாக சொல்கிறார்கள்.(ஆசரிப்புக் கூடார வாசல் கிழக்கு நோக்கி இருப்பதை நினைவில் கொள்க). இவ்வாறு தெளிப்பது, ஆரோன் தன்னை நோக்கியே தெளிப்பதாயும், அவருக்குக் குறுக்கே தெளிப்பதாயும் இருக்கும்.

**காளையின் பலி - அடையாள விளக்கம்**

காளை பலியிடப்பட்டது சுவிசேஷயுக கிறிஸ்தவர்களுக்கு அடையாளமாக

காண்பிக்கப்பட்டுள்ளது என்பதை சற்று ஆராய்ந்து பார்க்கலாம். முதலில் எதற்காக இந்த பலி அடையாளமாக இருக்கிறது என்று பார்க்கும்போது,

**எபிரேயர் 10:1**

**'நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால்.."**

என்று பார்க்கிறோம். இதில் குறிப்பிடப்பட்டிருக்கிற 'வரப்போகிற நன்மைகளின் நிழல்" என்றால், அதன் பொருள் என்னவென்று பார்ப்போம்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவன் இஸ்ரயேல் தேசத்தை வழிநடத்திய விதம் ஆகியவை வேதத்தில் பதிவுசெய்யப்பட்டதன் நோக்கத்தைக் குறித்து வாசிக்கையில்,

**ரோமர் 15:4**

**'தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது"**

பழையஏற்பாடு முழுவதும் சுவிசேஷயுக கிறிஸ்தவ சபையாகிய நம் நிமித்தம் எழுதப்பட்டும் பதிவுசெய்யப்பட்டும் இருக்கிறது. இப்படியிருக்க, எபிரேயர் 10:1ல் எழுதியிருக்கிற வரப்போகிற நன்மை என்னவென்று பார்க்கும்பொழுது, நாம் முன்பு வாசித்ததுபோல, காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் பலியின்மூலமாக இஸ்ரயேல் ஜனங்கள் தாங்கள் செய்த எல்லா பாவங்களிலிருந்தும் பரிசுத்தமாக்கப்பட்டனர். இது எதற்கு அடையாளம்?

இஸ்ரயேல் ஜனங்கள் முழு உலக ஜனங்களுக்கு அடையாளமாக உள்ளனர். காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் பலி முழு உலக ஜனங்களின் பாவ நிவர்த்திக்கு அடையாளமாக உள்ளது. காளையின் இரத்தம் முழு உலக ஜனங்களின் பாவ நிவர்த்திக்கு அடையாளம் என்றால், காளை எதற்கு அடையாளம் என்பது நமக்குத் தெரியும். காளை என்பது நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மற்றும் அவருடைய பெரிதான ஈடுபலியைக் குறிக்கிறது. இவையே விசேஷித்த பலிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**எபிரேயர் 9:23**

**'..ஆதலால் பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது, பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாமே"**

செலுத்தப்பட்ட அந்த காளையின் பலி எல்லா மனிதர்களின் பாவங்களை எடுத்து போடுகின்ற நம் கர்த்தராகிய இயேசுவின் மீட்கும்பொருள்தான்.

**1தீமோத்தேயு 2:5,6**

**'தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய**

**கிறிஸ்துஇயேசு அவரே, இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது"**

கிறிஸ்து தம் ஜீவனை சரிநிகர் சமான விலையாகக்கொடுத்து, உலகத்தின் பாவங்களுக்கு நிவர்த்திசெய்தார். இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**எபிரேயர் 9:26**

**'..அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக, இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்"**


**எபிரேயர் 9:11,12**


**'கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளின் பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்த சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்".**

இப்பொழுது நாம் இந்த நிழல்களின் பொருள் என்னவென்றும், அதன் முக்கியத்துவம் இன்னதென்றும் அறியலாம்.

## காளை

காளையானது நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது என்று முன்பே பார்த்தோம். காளை எந்தக் குறையும் இல்லாததாக இருக்கவேண்டும். இது இயேசுகிறிஸ்து பரிபூரண மாம்சீக நிலை உள்ளவராக இருந்ததைக் காட்டுகிறது





**எபிரேயர் 7:26**

**'பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்"**

இங்கு **ஆரோன்** (பிரதான ஆசாரியன்) - இயேசுகிறிஸ்து பிரதான ஆசாரியராக பிதாவாகிய தேவனால் உயர்த்தப்பட்டதற்கு அடையாளமாயிருக்கிறது(எபி 5:5,6)

**பலியாக நியமிக்கப்பட்ட காளை** - இவை இயேசுகிறிஸ்துவின் பரிபூரண மாம்சீக நிலைக்கு அடையாளம். (எபிரேயர் 10:7) இயேசுவை எப்படி பலிசெலுத்த அல்லது கொல்லமுடியும் என்று நாம் ஆச்சரியப்படலாம். இது இயேசுவின்அவர் மனப்பூர்வமாக தன்னை ஞானஸ்நானத்தில் ஒப்புக்கொடுத்தபோது சம்பவித்தவைகளுக்கு அடையாளம்.

**பொடியாக்கப்பட்ட தூப வர்க்கம்** - இவை இயேசுகிறிஸ்துவின் மனித வளர்ச்சியில் பூரணமாக 30 வயதுவரை வளர்ந்ததைக் குறிக்கிறது(லூக்கா 2:52). அவர் பெற்றிருந்த



குணலட்சணங்கள், பொடியாக்கப்பட்ட தூபவர்க்கமாகி, மெருகேற்றப்பட்டு, பூரணப்பட்டிருந்ததைக் குறிக்கிறது.

**தூபவர்க்கத்தை கைப்பிடிநிறைய எடுத்து** - இவை இயேசுகிறிஸ்து முழுவதுமாக தன்னைக் கொடுத்ததைக் குறிக்கிறது

**நெருப்புத்தனல்** - தேவனுடைய காரியங்களுக்கு விரோதமாக இவ்வுலகம் தரும் எதிர்ப்புக்கள், துன்பங்கள், அறியாத ஜனங்களால் வந்த துயரங்கள் இவற்றைக் காட்டுகிறது

**காளையின் இரத்தம்** - இது இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தைக் குறிக்கிறது. மனிதனின் உயிர் இரத்தத்தில் உள்ளது. மனிதனின் ஜீவனுக்காக இயேசு கிறிஸ்துவின் இரத்தம் பலியானதைக் குறிக்கிறது. விஞ்ஞானப்பூர்வமாக, இரத்தத்தில் காணப்படும் சிவப்பு அணுக்கள், ஜீவனுக்கேதுவான பிராணவாயுவை சரீரம் முழுவதும் எடுத்துச்செல்கிறதை அறிவோம். இவ்விதமாக இயேசு தம் மாம்ச ஜீவனை தேவசித்தத்துக்கு பலிசெலுத்தினார்.

**ஆரோன் பரிசுத்தஸ்தலத்தில் நுழைந்து அங்கு சில தருணங்கள் செலவழித்தது** - நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் $3^{1.:.2}$ வருட ஊழியத்திற்கு அடையாளம்.

ஆரோன் பரிசுத்தஸ்தலத்தில் என்ன செய்தான்? எதற்கு இவை முன்னடையாளம் என்று இப்போது பார்ப்போம்.

**சுகந்த வர்க்கத்தை பொற்பீடத்தில் உள்ள நெருப்பில் போடுகிறார்** - தானாக முன்வந்து, யாருடைய வற்புறுத்தலுமின்றி, அவமானங்களையும் நிந்தனைகளையும் பாடுகளையும் ஏற்றுக்கொள்வதைக் குறிக்கிறது.

**சுகந்த வர்க்கத்தை நெருப்பில்போட்டால் வாசனைப் புகை மேலே எழும்பி, பரிசுத்த ஸ்தலம் முழுவதையும் மூடும்** - இயேசு எவ்வாறு $3^{.:.2}$ வருட ஊழியத்தில் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து ஊழியத்தை முடித்தாரோ அதேபோல் நாமும் இயேசுவைப் பின்பற்றி கீழ்ப்படிந்து உபத்திரவங்களைசந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும்போது, அது தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகும் (எபேசியர் 5:2)

**ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் நுழைதல்** - இவை எதை அடையாளமாகக் காட்டுகிற -தென்றால், தேவசித்தத்தின்படி இயேசுகிறிஸ்து தம்மை மீட்கும் பொருளாகக் கொடுத்தது

**பரிசுத்த ஸ்தலம் முழுவதையும் மூடிய வாசனை புகை மகா பரிசுத்தஸ்தலத்திற்கும் வந்து கிருபாசனத்தை முழுவதையும் மூடியது** - இவை தேவனுடைய நியாயப்பிரமாணத்தை இயேசுகிறிஸ்து முழுவதுமாக நிறைவேற்றியதை அடையாளமாகக் காட்டுகிறது. கிருபாசனம் எதற்கு அடையாளம் என்றால், தேவனுடைய நீதிக்கு அடையாளம், தேவனுடைய நீதி நிறைவேறவே தேவன் நியாயப்பிரமாணத்திற்கு கீழாக இயேசுகிறிஸ்துவை அனுப்பினார்(கலாத்தியர் 4:4)

**ஆரோன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் காளையின் இரத்தத்தோடு உள்ளே நுழைந்தான்** - இவை இயேசுகிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்து நாற்பதுநாள் இந்த பூமியில் இருந்து பின் பரலோகம் ஏறிச்சென்றதை அடையாளமாகக் காட்டுகிறது (அப் 1:3 மற்றும் எபிரேயர் 9:24)

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தபின்பு பரலோகம் ஏறிச்சென்று, என்ன செய்தார் என்பதை இங்கு ஆரோன் மகா பரிசுத்தஸ்தலத்தில் அடையாளமாகச் செய்தார்.

**காளையின் இரத்தம்** - இவை இயேசுகிறிஸ்துவின் பரிபூரண மனிதத்துவத்தையும், அதிகாரத்தையும் காட்டுகிறது.

**கிருபாசனத்தின்மேல் காளையின் இரத்தத்தைத் தெளித்தல்** - இவை தேவ நீதியை அடையாளமாகக் காட்டுகிறது.(யாத் 21:23). ஜீவனுக்கு ஜீவன், நமது

ஜீவனுக்காக அவருடைய ஜீவன்(உயிர்-இரத்தம்)கொடுத்ததைக் குறிக்கிறது.

இப்போது ஆரோன் பலியை யாருக்காக செலுத்தினான்? அதன் உண்மையான அர்த்தம் என்ன என்று பார்க்கலாம்.

### *காளையின் பலி எதற்காக? தனக்காகவும்.., தன் வீட்டாருக்காகவும்...*

### *தனக்காக.. - விளக்கம்*

நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாக ஆரோன் மற்றும் காளையின் இரத்தம் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாகக் காட்டப்பட்டுள்ளது. இப்போது ஆரோனுக்காகவும், அவன் வீட்டாருக்காகவும் பலி செலுத்தப்பட்டது. ஆரோனின் பாவத்திற்கு பலி செலுத்தப்படவேண்டியது அவசியமே.

ஆனால் ஆரோனிற்கு அடையாளமான இயேசுகிறிஸ்துவிற்காக பலிசெலுத்தவேண்டிய அவசியமில்லை. அப்படியென்றால், இங்கு 'தனக்காக" என்பதை கர்த்தராகிய கிறிஸ்துவின் சரீரத்தைக்குறிக்கிறது. அதாவது அவருடைய சரீரமான அவயங்களைக் குறிக்கிறது**(1கொரிந் 12:2).** 'தான்" என்பது அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் 'கிறிஸ்து இயேசுவின் சபையார்" ஆகும்.

### தன் வீட்டார் - விளக்கம்

தன் வீட்டார் என்பது எல்லா விசுவாசிகளையும் காட்டுகிறது- **1தீமோத்தேயு 3:15.** இயேசுகிறிஸ்துவையும் அவருடைய ஈடுபலியையும் விசுவாசிக்கிற எல்லோரும் 'தன்வீட்டார்" ஆவார்கள். இவை எதைக் காட்டுகிறது என்றால் அவரை விசுவாசிக்கிறவர்கள் நீதிமான் ஆக்கப்படுவதைக் குறிக்கிறது **(அப்போஸ்தலர் 10:43)**.

மகா பரிசுத்த ஸ்தலத்தில் காளையின் இரத்தத்தை கிருபாசனத்தின்மேல் தெளித்தவிதம் பற்றிப் பார்ப்போம்.

**லேவியராகமம் 16:14**ன்படி, இரத்தத்தை எடுத்து கிருபாசனத்திற்கு கீழ்ப்புறமாகவும் அதற்கு முன்பாகவும் 7தரம் தெளிக்கவேண்டும். இந்த 7 தரம் தெளிக்கவேண்டும் என்பதன் அர்த்தம், சுவிசேஷ யுகம் முழுவதும் இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்கு தரப்படுகிற நீதிமானாக்கப்பட்ட நிலையைக் குறிக்கிறது. இந்த இரத்தத்தை தெளித்தவிதம் அருகில் காட்டியுள்ளபடி சிலுவை குறியீட்டில் தெளித்ததாக நம் ஆராய்ச்சியில் புலனாகிறது.

அதேசமயம் வெள்ளாட்டுக்கடா இரத்தத்தை ஒரேதரம் தான் தெளிக்கவேண்டும். ஏழுதரம் தெளிக்கவேண்டியதில்லை. ஆகவே இந்த பாவ நிவாரண நாளின் பலியில் இந்த காளையின் பலி மிகப்பெரிய காரியத்திற்கு அடையாளமாக உள்ளது.
இப்போது நாம் பாவ நிவாரணத்தின் இரண்டாவது பலியைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.


### பலி - 2 இரண்டு வெள்ளாட்டுக் கடாக்கள்

லேவியராகமம் 16:7-10ல் உள்ளபடி, இரண்டு வெள்ளாட்டுக் கடாக்கள் ஆசரிப்புக் கூடார வாசலில்



நிறுத்தப்பட்டு, ஆரோன் இரண்டு ஆட்டுக்கடாக்களின்மீது சீட்டு போடுகிறார். அதில் ஒன்று கர்த்தருடைய ஆடாகவும், மற்றொன்று போக்காடாக விடப்படும்படியும் தேர்வு செய்யப்படுகிறது.

கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவை ஆரோன் பாவநிவர்த்தியாக பலிசெலுத்தினார். மற்றொரு வெள்ளாட்டுக்கடா உயிரோடே கர்த்தருக்கு முன்பாக நிறுத்தப்பட்டு போக்காடாக வனாந்தரத்தில் விடப்பட்டது.



**கர்த்தருடைய ஆடு**

முதலில் நாம் கர்த்தருக்கென்று பலி செலுத்தப்படுகிற வெள்ளாட்டுக்கடாவைப் பற்றி விளக்கமாகப் பார்க்கலாம். இதைக் குறித்த வசனப்பகுதியை வாசிக்கையில்,

**லேவியராகமம் 16:15,16**

**'ஜனத்தினுடைய பாவநிவாரணபலியான வெள்ளாட்டுக்கடாவை அவன் கொன்று, அதின் இரத்தத்தைத் திரைக்கு உட்புறமாகக்கொண்டுவந்து, காளையின் இரத்தத்தை தெளித்ததுபோல, அதின் இரத்தத்தையும் கிருபாசனத்தின்மேலும் அதற்கு முன்பாகவும் தெளித்து, இஸ்ரயேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும் பரிசுத்த ஸ்தலத்துக்காகப் பிராயச்சித்தஞ்செய்து, அவர்களிடத்தில் அவர்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்புக் கூடாரத்திற்காகவும் அப்படியே செய்யக்கடவன்"**

ஆரோன் காளையை பலிசெலுத்தியபிறகு இவ்வெள்ளாட்டுக்கடாவை 'இஸ்ரயேல் ஜனங்களின் பாவ நிவாரணத்திற்கென்று பிரகாரத்தில் பலிசெலுத்தவேண்டும். பலிசெலுத்தப்பட்ட வழிமுறையை நாம் காணும்பொழுது, காளையின் இரத்தத்தைத் தெளித்ததுபோல..". இந்த வெள்ளாட்டு கடாவின் இரத்தத்தை எடுத்துக்கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு சென்று அந்த இரத்தத்தை காளையின் இரத்தத்தை செய்ததுபோல செய்யவேண்டும்.

**நிழலும் பொருளும்**

இரண்டு வெள்ளாட்டுக் கடாக்கள் கர்த்தருக்கென்று சந்நிதியில் நிறுத்தப்பட்டன - இவை எதைக் குறிக்கிறதென்றால், நம் கர்த்தராகிய இயேசுவின் விலையேறப்பெற்ற பலியைத் தொடர்ந்து செலுத்தும் பலிகளைக் குறிக்கிறது. இன்றைய கிறிஸ்தவர்களுக்கான பலிசெலுத்தும் வாய்ப்பாகும்.

**ரோமர் 12:1**

**'சகோதரரே உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்"**

இந்த இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களானது கிறிஸ்துஇயேசுவை பின்பற்ற ஒப்புக்கொடுத்த கிறிஸ்தவர்களை அடையாளமாக்குகிறது. அழைக்கப்பட்ட நிலையிலிருக்கிற கிறிஸ்தவ விசுவாசிகள்,

அடுத்த படியை எடுத்துவைப்பதற்கு ஊக்குவிக்கப்படுவதை நாம் வாசிக்கிறோம்.

**1பேதுரு 2:21**

**'இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்"**

கிறிஸ்துவை விசுவாசிப்பது மாத்திரமல்ல, அவருக்காக முழுவதும் ஒப்புக்கொடுப்பதும், பாடுபடுகிறதும், உபத்திரவங்களை ஏற்றுக்கொள்வதுமாகும்.

**பிலிப்பியர் 1:29**

**'ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாய்ப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது"**

இந்த அடிச்சுவடுகளை வெறுமனே பின்பற்றாமல், உடன்படிக்கையின்மூலம் ஞானஸ்நானம் என்னும் அடையாளத்தினால் அவரைப் பின்பற்றுகிறார்கள்.

**'பலியினால் என்னோடு உடன்படிக்கை பண்ணின..."-சங்கீதம் 50:5** .

**ஆரோன் பிரகாரத்தில் இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களின்பேரில் சீட்டு போடுவது** - தேவனுடைய பார்வையில் எவ்வித பாரபட்சமுமின்றி தேர்ந்தெடுக்கப்படுவதைக் குறிக்கும். தங்களுடைய பலியின் உடன்படிக்கையை அதிக வைராக்கியத்தோடும் உண்மையோடும் நிறைவேற்றும் தம்முடைய ஜனங்களை கர்த்தர் பாரபட்சமின்றி தேர்ந்தெடுப்பார். இவர்களே கர்த்தருடைய ஆடாக குறிப்பிடப்படுகிறார்கள்.

'கர்த்தருடைய ஆடாகிய" இந்த வகுப்பாருக்கு என்ன நடந்தது? - 'கர்த்தருடைய ஆட்டை ஆரோன் கொன்று.."

இது எதற்கு அடையாளம் என்றால், இயேசுகிறிஸ்து இவர்களை தன் சரீரத்தின் அவயவங்களாக ஏற்றுக்கொண்டதால் இவர்களும் இயேசுகிறிஸ்துவின் மரணத்தில் பங்குகொள்வதைக் காட்டுகிறது. இதை அப்போஸ்தலனாகிய பவுலின் ஜீவியத்தில் நாம் வாசிக்கிறோம்

**அப்போஸ்தலர் 9:16**

**'அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்"**

**'பாவ நிவாரணபலியான வெள்ளாட்டுக்கடாவை அவன் கொன்று.."**

இங்கு நாம் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், சபையின் பலிகள் உலகத்தைப் பாவத்திலிருந்து மீட்பதற்காக கொடுக்கப்பட்ட ஈடுபலியில், ஒரு பாகமாக ஒருபோதும் கருதப்படாது. அதற்கு ஒரே ஒரு பரிபூரண மனிதனுடைய ஜீவன் தேவைப்பட்டது. அதை கிறிஸ்துவின் பலி நிறைவேற்றினது. இதற்கும் மேலாக ஒரு பலி தேவைப்படுவதில்லை. ஆனால் அவருடைய சரீரத்தில் ஒரு அங்கமாக கருதப்படும் சபை வகுப்பாரின் பலிகள், தனிநபர்களின் பாவங்களை மூடுகின்ற விலைக்கிரயத்தின்மூலம், தேவனுடைய பார்வையில் பரிசுத்தமுள்ளதாகக் கருதப்பட்டு

அங்கீகரிக்கப்படுகிறது.

இந்த வெள்ளாட்டுக் கடாவின் பலியும் பாவநிவாரண பலிகளில் ஒரு பாகமாகக் கருதப்படுகிறது. இந்த பலிகள் அப்போஸ்தலர் பவுல் கூறுவதில் பங்கடைகின்றன.

**கொலேசெயர் 1:24**

**‘இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அனுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்”**

இது இயேசுவின் அனுபவங்களை ருசித்துப்பார்க்க கிடைக்கப்பெற்ற மாபெரும் வாய்ப்பும் உரிமையுமாகும். வெள்ளாட்டுக்கடாவின் பலி, இஸ்ரயேல் ஜனங்களில் பாவ நிவாரணத்திற்காக, இவை இயேசுகிறிஸ்துவின் மீட்பின் தன்மை சபை மூலம் உலக ஜனங்களுக்குச் சென்றடைவதைக் காட்டுகிறது.

ஆரோன் காளையின் இரத்தத்தை தெளித்ததுபோல கர்த்தருடைய ஆட்டின் இரத்தத்தையும் செய்தான். இவை எதை அடையாளமாய்க் காட்டுகிறதென்றால், இந்த வகுப்பார் தங்களின் பலியின் வாழ்க்கையில் இயேசுகிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்தவர்களாக மாற்றப்படுவதைக் காட்டுகிறது

**ரோமர் 8:29**

**’.. தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு..”**

மேலும் **வெளிப்படுத்தல் 14:4**

**‘ஸ்திரீகளால் தங்களை கறைப்படுத்தாதவர்கள் இவர்களே, கற்புள்ளவர்கள் இவர்களே, ஆட்டுக்குட்டியானவர் எங்கேபோனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே. இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்”**

இவை எதை சுட்டிக்காட்டுகிறதென்றால், இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளை சரியாகப் பின்பற்றுவதைக் காட்டுகிறது.

இறுதியாக, கர்த்தருடைய ஆட்டின் இரத்தத்தை ஆரோன் எடுத்து மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பதைக் காண்கிறோம். அங்கு அதன் இரத்தத்தை கிருபாசனத்தின்மேலும், அதற்கு முன்பாகவும் தெளிக்கிறார். இது கர்த்தரின் இரத்தத்தை அல்லது இந்த வகுப்பாரின் பலியிடப்பட்ட ஜீவியத்தை எடுத்து சிலுவையின் வடிவில் செலுத்துவதைக் குறிக்கிறது. இதனிமித்தம் இவர்களும் இயேசுகிறிஸ்துவின் மகிமைக்குப் பங்குள்ளவர்களாகி, கிறிஸ்துஇயேசுவின் மரணத்தின் சாயலின்மூலம் உலகத்திற்கு இரட்சிப்பு அடையச் செய்கிறார்கள்.

**1யோவான் 2:2**

**‘நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்”**

இப்பொழுது கடைசியாக சீட்டுவிழுந்த போக்காடை குறித்து காண்போம்.



**போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக் கடா**

**லேவியராகமம் 16:21,22**

**'அதின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரயேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள்வசமாய் வனாந்திரத்துக்கு அனுப்பிவிடக்கடவன். அந்த வெள்ளாட்டுக்கடா அவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் தன்மேல் சுமந்துகொண்டு குடியில்லாத தேசத்துக்குப் போவதாக. அவன் அந்த வெள்ளாட்டுக்கடாவை வனாந்திரத்திலே போகவிடக்கடவன்"**

இவை கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தப்பட்ட 2 வெள்ளாட்டுக் கடாக்களில் ஒன்றாகும். இது எதற்கு அடையாளம் என்றால், கர்த்தருக்கென்று ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து இரண்டாவது இடத்தை பெறும் கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. ஆனால் இவர்கள் மரிப்பதற்குப் பதிலாக உயிருடன் இருப்பதைக் காண்கிறோம்.

**ஏன் 2வது இடம்?**

இவர்கள் தங்கள் முழு மனதோடு, உற்சாகத்தோடு உடன்படிக்கையை நிறைவேற்றாமல், அதற்கு எதிர்மாறாக நடந்து உலகத்திற்குரியதை நோக்கி அவற்றைப் பற்றிப்பிடித்து ஜீவிப்பதால் இவர்கள் இரண்டாம் இடத்தைப் பிடிக்கின்றனர். இந்த போக்காடு வகுப்பார் பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்படுகிறார்கள்.

**மத்தேயு 13:7**

**'சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது, முள் வளர்ந்து அதை நெருக்கிப் போட்டது"**

இந்த முட்கள் **'உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும்"** ஆகும். இவர்கள் 'புத்தியில்லாத கன்னிகைகள்" என்று வேதம் வர்ணிக்கிறது(மத்தேயு 25:23).

மேலும் இவர்கள் நாளுக்கு நாள் தங்கள் முழுவிருப்பத்தோடு தங்களின் பலியின் வாழ்க்கையை உலகத்தின் பாவத்திற்காக வீண் செலவு செய்ததினால் கிறிஸ்தவ வளர்ச்சிக்காக மிகக்குறைந்த நேரத்தையும் சக்தியையும் அர்ப்பணிக்க காரணமாயிருக்கிறது. இதனால் வனாந்தரத்தில் விடப்பட்டதாக பார்க்கிறோம். தேவன் நமக்கு கூறும் வார்த்தைகளை வாசிக்கையில்,

**மத்தேயு 6:33**

**'முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்"**

தேவ சித்தம் செய்வதை முதலாவது தலையாய பணியாகக் கொள்ளும்பொழுது தேவன் தம்

வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார்.

### போக்காட்டின் நிலை

போக்காட்டை அதற்கான ஆள் வசமாய் வனாந்தரத்திற்கு அனுப்பிவிடக்கடவன். அந்த வெள்ளாட்டுக் கடா அவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் தன்மேல் சுமந்துகொண்டு குடியில்லாத தேசத்திற்குப் போவதாக அவன் அந்த வெள்ளாட்டுக் கடாவை வனாந்தரத்திலே போகவிடக்கடவன். அந்த வெள்ளாட்டுக் கடா ஒரு ஆளிடம் ஒப்படைக்கப்படுகிறது. இந்த ஆள் யாருக்கு அடையாளம் என்றால், சாத்தானுக்கு அடையாளம். இந்த கிறிஸ்தவர்கள் தாங்கள் செய்த உடன்படிக்கையை விட்டுவிட்டு, உலக பாவத்திற்கு திரும்பிவிட்டபடியால் இவர்கள் சாத்தானிடம் ஒப்படைக்கப்படுகின்றனர்.

**1கொரிந்தியர் 5:5**

**'அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச் செய்கிறேன்"**

**1தீமோத்தேயு 1:19,20**

**'இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள். இமெனேயும் அலெக்ஸாந்தரும் அப்படிப்பட்டவர்கள். அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன்"**

வனாந்தரம் எதற்கு அடையாளம் என்றால், தனிமையைக் குறிக்கிறது. இந்த வகுப்பார் அவர்களுக்கு இடறுதலாக இருக்கக்கூடிய முட்கள் மத்தியிலிருந்து பிரிக்கப்பட்டு, மாம்சத்தின் அழிவுக்காக கட்டாயத்தின்பேரில் அனுமதிக்கப்பட்ட சூழ்நிலைகளுக்குள் தனிமையில் விடப்படுகிறார்கள். இயேசுவை பின்பற்ற தங்களை முழுவதுமாக அர்ப்பணித்த இவர்களுக்கு, தாமாக முன்வந்து பலியிடுவதற்கான வாய்ப்பு சிலகாலம் வரை உள்ளது. ஆனால் காலப்போக்கில் இவர்கள் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்களை தவறவிடும்போது, கட்டாயத்தின்பேரில் பலியிடவேண்டிய சூழ்நிலை உருவாகிறது. இதைக் குறித்து நாம் வாசிப்போம்

**1கொரிந்தியர் 3:15**

**' ஒருவன் கட்டினது வெந்துபோனால் , அவன் நஷ்டமடைவான். அவனோ இரட்சிக்கப்படுவான். அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்"**

இங்கு வாசிக்கிற அக்கினியானது இவர்களுக்கு வரும் சோதனைகளைக் குறிக்கிறது. இதன் மூலம் மனந்திருந்தி, கர்த்தரிடத்தில் தங்களை நிரூபிப்பதற்கான வாய்ப்பை அடைகிறார்கள்.

கடைசியாக, இந்த பலி செலுத்துகிற நாள் வருடத்தில் ஒருமுறை என்று பார்க்கிறோம். அந்த ஒருநாளின் விளக்கத்தை பார்க்கலாம்.

### பாவ நிவாரண பலியின் நாள் வருடத்தில் ஒரு நாள்

இந்த பலி செலுத்தும் வருடத்தின் ஒரு நாள் என்பது ஒரு காலத்தைக் காட்டுகிறது. அது

‘சுவிசேஷயுகத்தின்” காலத்திற்கு அடையாளமாக இருக்கிறது. இந்த சுவிசேஷயுகத்தில் இரண்டு பலிகள் செலுத்தப்படுகின்றன.

1. **தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் ஆரோன் செலுத்திய காளையின் பலி. இது சபைக்காக எல்லா விசுவாசிகளுக்காக இயேசுகிறிஸ்துவின் ஈடுபலியைக் குறிக்கிறது**
2. **இஸ்ரயேல் ஜனங்களின் பாவநிவிர்த்திக்காக செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக்கடாவின் பலி. இது முழு உலக ஜனங்களுக்காக சபையின் பலி மூலமாக கிடைக்கப்போகிற ஆசீர்வாதத்தைக் குறிக்கிறது. இவையே விசேஷித்த பலியாகும்.**

தேவன் தாமே அவர் சத்தத்தைக் கேட்கவும், அவரது சத்தியத்திற்குக் கீழ்ப்படியவும் உங்களுக்கு உதவிசெய்வாராக.

***தேவ கிருபை நம் அனைவரோடும் கூட இருப்பதாக, ஆமென்.***


THE ALTAR OF BURNT-OFFERING.

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/



